(செய்தி இதழாகப் பதிவு பெற்றது)

தந்தி

இல: 1042

1970 மே 30 சனிக்கிழமை

விலை சதம் 5

University of Jaffna
RECEIVED
1997 - 7 - 8
Periodicals Division
Library

"விதவையின் கண்ணீரால் உருவான வெற்றி அல்ல இது"

பேதமைகளை மறந்து வாழ்வோம் வாரீர்!

நாட்டு மக்களுக்கு பிரதமர் ஸ்ரீமா செய்தி

"கடந்த காலத்தில் என்னை வாழ்த்தியிருந்தாலும் சரி, அல்லது என்னை வீழ்த்த சதி செய்திருந்தாலும் சரி அவற்றை எல்லாம் மறந்து விட்டு இந்த நாட்டை முன்னேற்ற எனக்கு உதவுங்கள். பேதமைகளை மறந்து சகல இன மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வோம்"

புதிய பிரதமராக நேற்று பதவி ஏற்றுக் கொண்ட பின்னர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் திருமதி ஸ்ரீமா வோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ஸ்ரீமா மேலும் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் மீது முழு நம்பிக்கை வைத்து, எங்களை அமோக வெற்றி பெறச் செய்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தொண்ட தொள்கைகளை நிறைவேற்றுவதற்கு எமக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தந்ததற்காக உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

"கடந்த அரசாங்கம் தனது அதிகாரத்தின் உதவியுடன், ஒலிபரப்பு சாதனங்களின் ஏகபோகத்துடனும் முதலாளித்துவப் பத்திரிகைகளின் பிரசாரங்களுடனும் எம்மை முறியடிக்கப் பார்த்தது. நீதியுடன் போர் நடத்தியது. ஆனால் உங்களுக்கே வெற்றி கிட்டியது. என்றுமே நீதிக்குத்தான் இறுதி வெற்றி கிடைக்கும் என்பது நிரூபணமானது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஜாதிக சம்பத சுவீப் முடிவுகள்

கொழும்பு, மே 30

நேற்று இழுக்கப்பட்ட 15-வது ஜாதிக சம்பத சுவீப்பில் முதல் மூன்று பரிசுகளையும் பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:—

முதலாம் பரிசு

07 G 000343

ரூபா 43,910/-

இரண்டாம் பரிசு

11 G 000142

ரூபா 43,910/-

மூன்றும் பரிசு

02 G 000296

ரூபா 43,910/-

(4-ம் பக்கம் பார்க்க)

மீசுட்சி

மகாவலி கங்கையை வடக்கே திருப்ப இருபது வருட திட்டம் தீட்டினுங்க. ஆனால் ஒரே நாளில மக்கள் வெள்ளத்த ஸ்ரீமா திருப்பி போட்டாரே!

இராணி மாளிகையில் பிரதமர்....

பிரதமராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட கூட்டு முன்னணித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இராணி மாளிகையில் பிரித் ஓதும் வைபவத்தில் கலந்து கொண்டார். பட்டத்தில் இடமிருந்து வலமாக திருமைத்திரிபால சேனநாயக்கா, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அனுராபண்டாரநாயக்கா, மகாதேசாதிபதி திரு. வில்லியம் கொபல்லாவ ஆகியோர் காணப்படுகின்றனர். (ஜ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோர்ஜ் மன்னருக்கு உறவு முறையான

பிரிட்டிஷ் கோடீஸ்வரர் செக். மோசடியில் சிக்கினார்?

பிராங்பேர்ட், மே 29

ஒரு லட்சம் அமெரிக்க டாலர்கள் பெறுமதியான பிரயாணிகள் செக்குகளைத் திருடிய சம்பவம் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் கோடீஸ்வரரின் வழக்கறிஞர், தனது கட்சிக்காரர் ஏனையோருக்கு உதவி செய்ய முயன்றிருப்பதாக தான் நம்புவதாக கூறினார்.

டிரம்மன்ட்ஸ் என்னும் இந்த கோடீஸ்வரர் நேர்மையானவர் என்பதை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதற்காக, காலஞ்சென்ற ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரின் ஞான மகன் இவர் என்றும், இவரொரு திரைப்படத் தயாரிப்பாளர் என்றும் வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஏனையோருக்கு உதவி செய்ய முயலுகையில் 27 வயதுடைய இவர் கைது செய்யப்பட்டதாக கூறிய வழக்கறிஞர் அந்த "ஏனையோர்" யாரெனத் தெரிவிக்கவில்லை.

புகழ் பெற்ற கோடீஸ்வரரான டிரம்மன்ட் கடந்த வியாழக்கிழமை பிராங்பேர்ட் பெரிய ரயில் நிலையத்தில் பிரயாணிகள் செக்குகளை மாற்றும் போது கைது செய்யப்பட்டார். பிரசுரிப்பாளர் ஒருவரிடம் இருந்து இச் செக்குகள் திருடப்பட்டவை என நம்பப்படுகின்றது.

நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இவர், மோசடி செய்ததாக விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டார் என அவரது வழக்கறிஞர் ஹென்றி ஓர்மண்ட் தொடர்ந்து சொன்னார்.

இச் செக்குகள் திருடப்பட்டவை என்பது தனக்குத் தெரியாது என டிரம்மன்ட் தன்னிடம் கூறியதாக தெரிவித்த வழக்கறிஞர், தான் அடுத்து இவ் வழக்கின் பிரதம அரசாங்க வழக்கறிஞரை சந்திக்கப் போவதாகவும் பிராங்பேர்ட்டில் இருக்க அல்லது லண்டனுக்குச் செல்லக்கூடியதாக அவரை பிணையில் விடுவிக்கும்படி கேட்கப் போவதாகவும் சொன்னார்.

ஜேம்ஸ் பொண்ட் பாத்திரத்தில் நடித்த திரைப்பட நடிகரின் லண்டன் வீட்டை ஸ்கொட்லண்ட் யார்ட் பொலீஸார் சோதனையிட்டனர்.

இரண்டு கோடி அமெரிக்க டாலர் பெறுமதியுடைய டிரம்மன்ட் செக்குகளைத் திருட வேண்டிய அவசியமே இல்லையென அந்த நடிகர் பின்னர் கூறினார். (ர)

தோல்வி கண்ட மந்திரிகள் பிரியாவிடை பெற்றனர்

தேசிய அரசாங்கத்தின் தோல்விகண்ட ஐந்து அமைச்சர்கள் நேற்று தமது அமைச்சு காரியாலயங்களுக்குச் சென்று ஊழியர்களிடம் விடைபெற்றனர்.

திரு. யூ. பி. வன்னிநாயக்கா (நிதியமைச்சர்) டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா (உள்நாட்டமைச்சர்) திரு. ஈ. எல். பி. ஹுருள்ளே (போக்குவரத்து) திரு. ஏ. எப். விஜேமன்ன (நீதி அமைச்சு) திரு. ஆர்தர் அமரதுங்க (தகவல், ஒலிபரப்பு) ஆகியோரே இந்த ஐவருமாவர்.

ஏனைய அமைச்சுகளைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் நேற்று தமது காரியாலயங்களுக்கு வருவர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வரவில்லை.

முன்னாள் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவும், முன்னாள் கல்வி மந்திரி திரு. ஈரிய கொல்லையும் தமது அந்தரங்கக் காரியதரிசிகள்மூலம் தமது சொந்த உடமைகளைப் பெற்றுக் கொண்டனர். (ர)

வெறுப்படைந்த கணவன் தன்னுயிரை மாய்த்தான்

பொலனறுவை, மே 29

மனைவியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தால் வெறுப்புற்ற 35 வயதுடைய ஒரு கணவன் கிருமிநாசினி குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

அளுத்வெவையைச் சேர்ந்த எம். ஏ. சந்திரசேன என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்.

இவரது மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையில் காலஞ் சென்றவரின் மனைவியான எம். பி. சோமாவதி கூறியதாவது:– "எங்களுக்கு ஒரு பிள்ளை இருக்கின்றது. எங்களிடையே அடிக்கடி சண்டை ஏற்படுவது வழக்கம். இது பற்றி நான் பொலீஸில் புகார் செய்தேன்.

மறுநாள் இருவரையும் அழைத்த பொலீஸார், என்னை மீண்டும் துன்புறுத்த வேண்டாம் என கணவரை எச்சரிக்கை செய்தனர். பொலீஸிலிருந்து திரும்பும் வழியில் விரைவாக எனக்கு முன் வீட்டுக்கு வந்த கணவர் நிலத்தில் விழுந்து துடிப்பதைக் கண்டேன்."

பிரேத பரிசோதனையின் பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ர)

கப்பல்கள் மோதுண்டன

வாஷிங்டன், மே 29

டேனியேல் பூம் என்ற அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கி பிரஸிடெண்ட் குயிஸோன் என்ற பிலிப்பைன்ஸ் யுத்தக் கப்பலுடன் மோதுண்டது.

வேர்ஜீனியாவுக்கு அப்பால் ஹென்றி முனையில் இடம்பெற்ற இந்த விபத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பாதுகாப்பு இலாகா அறிவித்தது.

தாய்வானில் 1வது வங்கிக் கொள்ளை

தைப்பே, மே. 29

தாய்வானின் சரித்திரத்தில் நடைபெற்ற முதலாவது வங்கிக் கொள்ளை பற்றி துப்பு தருவோருக்கு வெகுமதியளிக்க பொலீஸார் முன் வந்துள்ளனர்.

இரண்டு கொள்ளையர்கள் வங்கியை உடைத்து உள்ளே புகுந்து 21 வயதுடைய வங்கி காவற்காரரைக் கொன்று பணத்துடன் தம்பி நீட்டியிருப்பதாக பொலீஸார் கூறினர். (ர)

தொட்டிலில் படுத்திருந்த சிசுவின் கழுத்து நசுங்கியது

களுத்துறை, மே. 29

தொட்டிலில் படுத்திருந்த எட்டு மாத குழந்தையொன்று தொட்டில் கம்புகளுக்கு இடையில் தலை சிக்கி கழுத்து நெரியுண்டதால் பரிதாபகரமாக மாண்டது.

களுத்துறை மரண விசாரணையாளர் நடத்திய விசாரணையின் போது காலஞ்சென்ற சிசுவின் தந்தையான டி. எம். டிகிரிபண்டார என்பவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

விசாரணையில் டிக்கிரி பண்டார கூறியதாவது:– சம்பவ தினம் மூத்த மகனை வீட்டில் விட்டு பிள்ளையைப் பார்த்துக் கொள்ளும்படி கூறி நானும் மனைவியும் தோட்டத்துக்கு வேலைக்குப் போனோம். தோட்டத்தில் தொழில் செய்வது மூலமே ஜீவனம் நடத்துகின்றோம்.

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது பிள்ளைக்குச் சுகமில்லையென கேள்விப்பட்டு உடனே வீட்டுக்குத் திரும்பினோம். தொட்டில் கம்புகளுக்கு இடையில் பிள்ளையின் கழுத்து நெரியுண்டு இறந்து கிடப்பதைக் கண்டேன்." (ர)

பெண்ணின் உலக சாதனை

காட்மாண்டு, மே. 24

பெண்கள் அதிக உயரமுள்ள சிகரத்தில் ஏறும் முயற்சியில் ஜப்பானைச் சேர்ந்த ஒரு பெண் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

மிஸ் ஸெட்ஸாயுகோ வாட்னாபே (31 வயது) என்ற அந்தப் பெண் எவரெஸ்ட் சிகரத்தின் தென் பகுதியில் 26200 அடி வெற்றிகரமாக ஏறியதாக இங்கு விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இம்மாதம் 17-ந் தேதி அவ்வாறு வாட்னாபே 25200 அடி ஏறினார்.

அப் பெண் டோக்கியோ அருகில் உள்ள சைபா நகரத்தைச் சேர்ந்தவர். ஜப்பானைச் சேர்ந்த எவரெஸ்ட் சிகரம் ஏறும் கோஷ்டியில் உள்ள ஒரே பெண் வாட்னாபேயாகும்.

இருள் வந்தது

மாஸ்கோ, மே. 29

சோவியத் நகரமான கபரோவ்ஸ்க் இரு பெண்களினால் நேற்று இருளில் ஆழ்ந்தது.

குடிபோதையில் இருந்த இப் பெண்களினால் ரயில்களும், ஆலை இயந்திரங்களும் நின்றன.

தங்களுக்குத் தைரியம் ஏற்படுவதற்காக அப் பெண்கள் "ஸ்பிரிட்"டைக் குடித்துவிட்டு உயர்சக்தியுள்ள மின்சாரக் கம்பிகள்மீது ஏறி நகரக் காட்சிகளை ரசித்தனர். அவர்களது உயிரைக் காக்கும்பொருட்டு மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டது.

நடிகர் மீது கொலை முயற்சி

லொஸ்ஏஞ்சல்ஸ், மே 29

46 வயதான சினிமா நடிகர் மேர்பியை பொலீஸார் கைதுசெய்தனர்.

கொலைசெய்யமுதமாக பயங்கர ஆயுதங்களால் அவர் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்.

இரண்டாவது உலக யுத்தத்தில் பெருந்தொகையான ஜெர்மனியர்களைத் தன்னந்தனியாகக் கொன்றதற்காக அமெரிக்க காங்கிரஸ் அவருக்கு தங்கப்பதக்கம் அளித்திருந்தது.

பட்டினி பட்டாளம்

டாக்கா, மே. 29

2000க்கு மேற்பட்டவர்களைக் கொண்ட பட்டினிப்பட்டாளம் ஒன்று கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள திஜைபூர் நகருக்கு அணிவகுத்துச் சென்று உணவும், உடையும் தருமாறு ஆர்ப்பாட்டம் செய்ததாக பாகிஸ்தான் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

25 மைல்தூரம் நடந்துசென்ற அவர்கள் மாவட்ட அதிகாரியின் காரியாலயத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். பலர் மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

தந்தி
சிறு விளம்பரங்கள்

டப்ளினின் இரு முன்னாள் மந்திரிகள் கைதாகினர்

டப்ளின், மே. 29

அயர்லாந்துக்கு ஆயுதங்களைக் கடத்த முயன்ற குற்றச்சாட்டின் பேரில் இரு முன்னாள் மந்திரிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

முன்னாள் நிதி மந்திரி திரு. சார்ள்ஸ் ஹாகே, முன்னாள் விவசாய மந்திரி திரு. நில்பிலேனி ஆகியோரே அவர்கள்.

குழப்பத்தில் ஆழ்ந்திருக்கும் வட அயர்லாந்துக்கு உதவும் பொருட்டு அவர்கள் ஆயுதங்களைக் கடத்த முயன்றதாக பிரதமர் திரு லிஞ்ச் குற்றஞ்சாட்டியிருந்தார்.

நீதிமன்றம் இருவரையும் தலா 1000 பவுன் பிணையில் விடுதலை செய்தது.

சதியில் ஈடுபட்டதாக மேலும் மூவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் (ர)

நல்வாழ்த்துண்டு

புதிய அரசை எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகள் நான்கு- ஒன்று, ஆகாயத்தை அளாவ உயர்ந்து நிற்கும் வாழ்க்கைச் செலவு இரண்டு, வேலையில்லாத் திண்டாட்டம்- மூன்று, கல்வி அமைப்பின் கந்தர்கோள நிலை- நான்கு, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சீர்கெட்ட பஸ் சேவை- இந்த நான்கையும் எந்த அரசும் உடனடியாகத் தீர்த்துவிட முடியாது என்பதை எவரும் ஒப்புக் கொள்வர்- ஆனால் புதிய அமைச்சர் அவை நியமிக்கப்பட்டதும் எவ்வளவு விரைவில் தீர்த்து வைக்க அமைச்சர்கள் முற்படுகின்றார்களோ அவ்வளவுக்கு மக்களின் பாராட்டும் நன்றியறிதலும் நல்வாழ்த்தும் உண்டு என்பது திண்ணம்-

தந்தி

வசியம்

காதலில் வெற்றியை எதிர்பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவசவிபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குந்த வித்தியாதனய, ஊறாப்பொலை.

R- 65012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஷ்டஈடு வழக்கில் தோட்டத்துரை சாட்சியம்

மனுதார் பெண்ணுடன் புகைப்படம் எடுத்தேன்

நஷ்டஈடு கோரி யுவதி வழக்கு

மனுதாரர் மீது எனக்கு விசேஷ சிரத்தை இருந்தது. அவருடன் ஒன்றுக இருந்து புகைப் படம் எடுத்திருக்கிறேன். மனுதாரின் வீட்டில் வைத்து அந்தப் புகைப் படம் எடுக்கப்பட்டது. களுத்துறை நீதிமன்றத் தில் விசாரணை செய்யப்பட்ட வழக்கொன்றில் தோட்ட சுப்பிரண்டனை எதிர்மனுதாரர் ஒரு வர் இப்படிக் கூறினர்-

பராதொடையைச் சேர்ந்த பள் ளியகே கருணவதி மனுதாரரா வார். எல் ஏ பி பேர்ஸ்டோ எதிர் மனுதாரர். திருமணம் செய் வதாக உறுதியளித்து தன்னித்தன் மையை அழித்ததாக கூறும் மனு தாரர் 30,000 ரூபா நஷ்ட ஈடு தேரியுள்ளார்.

வழக்கு விசாரணையின்போது சாட்சி மேலும் கூறியதாவது:—

"எனது தோட்டத்துக்கு பக்கத் தில் திருக்கும் தாணியிலேயே மனு தாரர் இருக்கின்றார். அக்தாணியில் ரப்பர் மரங்கள் இருக்கின்றன. நான் தோட்டத்துக்கு வேலைக்கு வரும்போது, மனுதாரர் சிறுபிள் ளையாக இருந்தார். மனுதாரரும் ஏனையோரும் எனது பங்களாவுக்கு வருவர். மனுதாரரின் தந்தையான ரோமாலிஸ் பெரேராவின் வீட் டுக்கு சில வேளைகளில் செல்வேன்.

அவர்களின் வீட்டுக்குச் சென் றால் கோப்பி அல்லது தேநீர் குடிப்பேன். அந்த மனுதாரருடன் இருந்து படம் எடுத்திருக்கின் றேன். அப்போது மனுதாரருக்கு சுமார் 12 வயது இருக்கும். வேறு பெண்ணுடன் இருந்து படம் எடுத்தது கிடையாது."

"சாதாரணமாக சிறு பிள்ளைக ளில் எனக்கு பற்றுதல் உண்டு மனு தாரர் அறிமுகமானதிலிருந்து அவர் மீது பற்றுதல் கொண் டேன்.

"குருன்பாலி தொடுதுவக்கு என் பவர் சாட்சியமளிக்கையில் கூறிய தாவது:— "எதிர் மனுதாரரை நீண்ட நாளாக அறிவேன். தூ லேல்ல தோட்டத்தைச் சேர்ந்த தங்காணி ஒருவர் எனது தோட் டத்துக்கு வந்து எதிர் மனுதாரர் என்னை அழைப்பதாகத் தெரிவித் தார்.

"அப்போது இரவு 11 மணி இருக்கும். நான் மனுதாரரின் பங்களாவுக்குச் சென்ற போது அவரது சகோதரிகளும் மனுதா ரர் கருணவதியும் அங்கு இருந்த னர். சமையல்காரரின் மனைவியான சோமவதியும் அங்கு இருந்தார்.

"மனுதாரரின் தந்தை எனக்கு சிறிய தந்தை உறவு முறை. மனு தாரர் என்னை "அண்ணை" என்றே அழைப்பார். நான் அங்கு சென்ற போது கருணவதி படுத்தை அறை யில் இருந்தார்.

"இங்கு ஏன் இருக்கின்றீர், வீட் டுக்குப் போகவில்லையா?, என நான் மனுதாரரிடம் வினவ, அவர் "முடியாது" என்றார். "தோட்டத் துரை இன்று என்னைத் திருமணம் செய்வதாக உறுதியளித்திருக்கின் றார். அதனால் நான் போக மாட் டேன்" என மனுதாரர் மேலும் கூறினர்.

"அதன் பின்னர் கருணவதியின் பெற்றோரைத் தேடிச் சென்று "கருணவதி ஏன் அங்கு இருக்கின் றார்? வீட்டுக்கு வர விடுங்கள்" என்று கூறினேன். அதற்கு அவர் கள் விருப்பம் தெரிவித்தவில்லை. தோட்டத்துரை திருமணம் செய்து தொள்வதாக கூறியிருப்ப தாக அவர்கள் கூறினர். ஆனால் தொந்தரவு எதுவும் செய்யப்பட்ட தாக அவர்கள் கூறவில்லை."

களுத்துறை மாவட்ட நீதவான் திரு. சி பி. வலகம்பாயா மேல் விசாரணையை ஒத்திவைத்தார். (ர)

இரு சேகுவேரா சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை

சேவேரா இயக்கத்தைச் சேர்ந் தவர்கள் என்று கூறப்படும் இரு சந்தேக நபர்கள் கொழும்பு தெற்கு நீதிபதி திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு தலா 500 ரூபா பிணையில் விடப்பட்டுள்ளனர்.

பந்துல பிரேமதிரி. டபிள்யூ. டி சில்வா தன்னங்நரா ஆகிய இந்த இரு சந்தேக நபர்களும் வைத்திருந்ததாகக் கூறப்படும் வரைபடங்களையும் பொலீசார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

தெஹிவளை பகுதியைக் காட்டும் அந்த வரைபடத்தில் பொலீஸ் நிலையங்கள், ஆஸ்பத்திரிகள், மின் சக்தி நிலையங்கள் ஆகியவற்றைக் காட்டும் இடங்கள் புள்ளியிடப் பட்டிருப்பதாக பொலீசார் கூறி னர்-

இருவரும் சேகுவேரா இயக்கத் தைச் சேர்ந்தவர்கள் என்று தக வல் கிடைத்ததைத் தொடர்ந்து தாம் கைது செய்ததாகப் பொலீ சார் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் பாடசாலை மாணவர்கள் என் றும், இருவரையும் சேகுவேரா இயக்கத்துடன் சம்பந்தப்படுத்து வது அர்த்தமற்றது என்றும் சந் தேக நபர்கள் தரப்பு வழக்கறி ஞர் வாதாடினர். இருவரும் புவி யியல் கற்கும் மாணவர்கள் என்ற படியால் இவர்களிடம் வரைபடங் கள் இருந்ததில் தவறு இல்லை என்றும் மேலும் நீதிமன்றத்தில் கூறப்பட்டது.

நீதவான் மேல் விசாரணையை ஜூன் 5-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ர-5)

இந்தியாவுக்கு பெரும் உதவி

பாரிஸ், மே. 29

இந்தியா தன் 4-வது ஐந் தாண்டுத் திட்டத்தில் 1969 — 70-ம் ஆண்டில் 45 கோடியே 87 லட்சம் பவுன் செலவு செய்யும். இதற்கான வெளிநாட்டு உதவியை அது பெறும் என உலகவங்கி அறி வித்தது.

சென்ற ஆண்டு அது பெற்ற 41 கோடியே 70 லட்சம் பவுனை விட இந்த ஆண்டில் இந்தியா வுக்கு அதிக உதவி கிடைக்குமென உலக வங்கி அதிகாரி ஒருவர் கூறினர்.

விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

நியூயோர்க், மே. 29

"அப்பலோ – 12", "அப் பலோ – 13" விண்வெளித் தப்பல்களின் ராக்கெட்டுக ளில் இருந்து வெளிவந்த ஒலி அலைகளை அமெரிக்க விஞ்ஞா னிகள் பதிவு செய்துள்ளனர்.

விண்வெளித் தப்பல்கள் பூமி யிலிருந்து சுமார் 180 மைலுக்கு மேலாகச் சுற்றி வரும்போது அவை சுமார் இரண்டு மணி நேரம் பதிவு செய்யப்பட்டனவாம்.

மாஸ்கோவில் ருமேனியப்பிரதமர்

மாஸ்கோ, மே. 29

ருமேனியப் பிரதமர் சோவி யத் பிரதமர் தொலிஜினுடன் பேச்சு நடத்தும் முகமாக மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும்படி கோரி மகா தேசாதிபதி தனக்கு அனுப்பிய கடிதத்தை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா படிக்கின் றார். அருகில் கட்டுகம்பளை எம். பி. திரு. டி. பி. சுபசிங்க காணப்படுகின்றார்.

பிரிட்டிஷ் தேர்தல்

பெரகோட்டா, மே. 29

பிரிட்டிஷ் பொதுத் தேர் தலுக்கு இன்னும் மூன்றுவாரங் கள் மாத்திரம் இருக்கும் பேரது, லிபரல் கட்சி முழு அளவிலான தேர்தல் பிரசா ரத்தை ஆரம்பிப்பதற்குத் தன்னைத் தயார்படுத்திக் தொண்டுள்ளது.

லிபரல்கட்சி, வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் 25 வருடமாக இருந்துவரும் தொழிற் கட்சி கன்சர்வேட்டிவ் கட்சிக ளின் ஆதிக்கத்தை முறியடிக்கும் படி கேட்கப்பட்டுள்ளது.

630 பிரதிநிதிகளைக் கொண்டு உள்ள பிரிட்டிஷ் பாராளன்சபையில் கர்பொழுது 13 பிரதிநிதிகளை மட்டும் லிபரல்கட்சி கொண்

தேர்தல்முடிவால்லண்டனில் இலங்கையருக்கு ஆத்திரம்

லண்டன், மே. 29

ஐக்கியதேசியக் கட்சியின் ஆதர வாளர் ஒருவர், ஸ்ரீலங்கா சுதந்தி ரக்கட்சி ஆதரவாளர்களை கத்தி யால் குத்தமுயன்றதான சம்பவம் ஒன்று லண்டனில் நடைபெற்றுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி கூறப்படுவதா வது:-

லண்டனில் உள்ள இலங்கை மாணவர் விடுதி நிலையம் ஒன்றில் இலங்கையர் பலர் தேர்தல் முடி வுகளை வானொலியில் கேட்டுக் கொண்டு இருந்தனராம்.

வானொலியில் தொடர்ந்து ஸ்ரீல சுதந்திரக்கட்சியினரே வெற்றியடை வதாக அறிவிக்கப்பட்டபோது அதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதர வாளர் என்று சொல்லப்படும் ஒருவர் கத்தி ஒன்றை எடுத்து, அங்கு குழுமியிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர்க ளைக் குத்த முயன்றாராம்.

அப்போது அங்கு பிரசன்ன மாகி இருந்த இலங்கை ஸ்தானிக ராலயத்தின் முதல் செயலாளர் இவ் விஷயத்தை உடனடியாகப் பொலீஸாருக்கு தெரிவித்தாராம். பொலீஸார் உடன் ஸ்தலத்திற்கு விரைந்து வந்து அமைதியை நிலை நாட்டினர்.

இந்தோ— பர்மா எல்லை

ரங்கூன், மே. 29

இந்தியா — பர்மா கூட்டு எல் லைக் கமிஷன் நேற்று இங்கு கூடி இரு நாடுகளின் எல்லையில் மேலும் 225 மைல்தூரத் திருத்தம் செய வது எனத் தீர்மானித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்களையிட்டு உஷாராக இருங்கள்!

பிரதமர் வேண்டுகோள்

"மக்களின் வெற்றிக்குமாசு கற்பித்து நாட்டில் வன் செயல்களை பரப்புவதற்கு தீய சக்திகள் சதி செய்து வருகின்றன. இதையிட்டு உஷாராக இருங்கள்" என பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்-

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது—

"கொழும்பிலும், ஏனைய சில இடங்களிலும் பொது உடமைகள் உட்பட தனிப்பட்டவர்களுக்கும், அவர்களின் உடமைகளுக்கும் எதிராக வன்செயல் சம்பவங்களைத் தூண்டிவிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்றதாக அறிக்கைகள் கிடைத்திருக்கின்றன-

"மே மாதம் 27-ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் கிடைத்த மக்களின் வெற்றியை உலக மக்களின் கவனத்தில் மாசு படுத்தும் நோக்கத்திற்காக அவல்கொண்டுள்ள சில தீய சக்திகளின் நடவடிக்கைகளாக இது இருக்கக் கூடும்-

"இந்த வெற்றியைக் குழப்புவதற்கான உள்நாட்டு நிலைமைகளை உருவாக்குவதற்கும், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது-

"முன்னைய அரசாங்கம் தோல்வியடையும் சந்தர்ப்பத்தில் எழக்கூடிய நிலைமைகளின் சாத்தியக் கூறுகள் பற்றி கூட்டுக் கட்சிகளாகிய ஐக்கிய முன்னணியின் தலைவர்களுடன் நான் மேன்மை தங்கிய மகாதேசாதிபதிக்கு இம் மாத முற்பகுதியில் எடுத்துக் கூறியதை நீங்கள் அறிவீர்கள்-

"மே மாதம் 27-ம் திகதி கிடைத்த வெற்றியை பாதுகாப்பதற்கு குறிப்பாக எனக்கு உதவி செய்தவர்களும், பொது மக்களும் அவதானமாக இருக்குமாறு நான் வேண்டிக் கொள்கின்றேன்-

"இந்தத் தீய சக்திகளை எதிர்த்து நாட்டில் சமாதானமும், ஒழுங்கும் நிலவுவதற்கு வழி பார்க்கவும்- இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கும், எனது அரசாங்கத்திற்கும் நாட்டு மக்கள் அங்கீகரித்துள்ள திட்டங்களை அமுலாக்குவதற்கு இந்த உதவியைச் செய்வதே சிறந்த வழியாகும்" இவ்வாறு பிரதமர் குறிப்பிட்டுள்ளார்- (ம)

'பீக்ஸ்' திட்டம் நேற்று முதல் தற்காலிகமாக நிறுத்தம்

அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டத்தை இலங்கை மத்திய வங்கி தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

இது சம்பந்தமான உத்தரவு, நாட்டில் உள்ள சகல வர்த்தக வங்கிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரை அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டத்தை அமுல் செய்ய வேண்டாம் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நிய செலாவணி சான்றிதழ் திட்டம் சம்பந்தமாக புதிய கூட்டரசாங்கம் கடைப்பிடிக்க இருக்கும கொள்கை தெளிவுபடுத்தப் படும்வரை இந்தத் திட்டம் அமுல் செய்யப்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் மோதல் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், மே. 29

பண்ணாகம் சந்தியில் இன்று நடைபெற்ற தேர்தல் அசம்பாவிதம் ஒன்றில் கந்தையா ஆறுமுகராஜா என்பவர் குத்திக் கொல்லப்பட்டார். இருவர் கவலைக்கிடமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

கந்தையா ஆறுமுகம், கதிர வேலு [illegible]வராசா ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு [illegible]க்கின்றார்கள்.

இது [illegible]ம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் [illegible]கைது செய்யப்பட்டு உள்ள [illegible]ப்பிள்ளை திருநாவுக்கரசும் [illegible]ஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்.

சங்கானை பொலீஸார் தொடர்ந்து புலன் விசாரணையில் ஈடுபட்டு உள்ளனர். (ஐ-220)

லேக்ஹவுஸ்முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 30

பல்கலைக் கழக மாணவர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று நேற்று லேக் ஹவுஸ் எதிரே கூடி சுலோகங்கள் கோஷித்து ஆர்ப்பாட்டம் செய்தது-

பொலீஸார் கண்ணீர்ப் புகை பிரயோகித்து கூட்டத்தைக் கலைத்தனர்- (ஐ)

இந்திரா பாராட்டு

புதுடில்லி, மே. 29

இலங்கையின் ஏழாவது தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அமோக வெற்றியீட்டியுள்ளது குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் கூட்டணி கட்சிகள் அடைந்த அமோக வெற்றி சம்பந்தமாக அவர் அனுப்பிய அந்தச் செய்தியில்,... இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவுகள் மேலும் பலப்படும் என்று தான் பெரிதும் நம்புவதாக திருமதி காந்தி தெரிவித்துள்ளார். (ர)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீன பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை), வெளியிட்ட திகதி 30 மே 1970.
Thanth 5, Gunasena Mawatha, Colombo-12.

ஜாதிக சம்பத ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 219-55 பெறும் 200 ஆறுதல் பரிசுகள் பின்வருமாறு:—

A

07 A 001161	01 A 000710
09 A 001149	08 A 000272

03 A 000354

B

04 B 001878	06 B 001320
04 B 001632	03 B 001266
05 B 000674	06 B 001908
04 B 001676	04 B 000416
06 B 001125	04 B 001867
03 B 001209	04 B 001418

C

04 C 000659	03 C 001868
06 C 000706	03 C 000645

11 C 000080

D

04 D 000977	08 D 000094
03 D 000961	03 D 001653
04 D 000788	12 D 001064
10 D 001939	05 D 001861
01 D 000120	06 D 001110

05 D 001395

E

06 E 000936	05 E 001146
07 E 000356	04 E 001595
11 E 000654	04 E 000513
12 E 000855	01 E 000005

07 E 000549

F

03 F 000946	03 F 001063
01 F 000900	66 F 000327
07 F 001863	05 F 000312

04 F 001489

G

10 G 000656	04 G 001749
01 G 000612	06 G 000641
04 G 001090	02 G 000856

H

02 H 000169	05 H 001247
04 H 001857	04 H 001207
07 H 001115	07 H 001878

J

07 J 001774	11 J 000311
09 J 001125	03 J 000968

K

04 K 000343	03 K 000225
01 K 001869	04 K 000042

L

02 L 001307	03 L 000448
01 L 000920	10 L 000300
02 L 000771	05 L 000864
03 L 000728	08 L 001918
82 L 000291	08 L 001349
07 L 001281	01 L 001476

M

02 M 001182	04 M 001588
01 M 000564	01 M 000963
03 M 000710	07 M 001644

N

02 N 001691	01 N 000242
11 N 000484	06 N 000111

01 N 000874

O

01 O 001897	08 O 001315
09 O 001587	05 O 001009
12 O 001321	05 O 000162
01 O 001695	01 O 000970
01 O 000175	08 O 000943
06 O 000047	01 O 001288

01 O 001495

P

11 P 000427	06 P 001663
14 P 001111	07 P 001632
06 P 000187	08 P 000303
04 P 001267	02 P 001946
09 P 000185	08 P 000334

06 P 001239

Q

07 Q 001092	01 Q 001364
07 Q 001738	02 Q 001788
05 Q 000614	10 Q 001597
04 Q 001465	06 Q 001975
04 Q 000864	12 Q 001095
02 Q 000213	11 Q 000045
12 Q 000191	07 Q 001678
07 Q 001138	05 Q 000931

R

08 R 001364	12 R 000703
05 R 000291	02 R 001284
12 R 000589	01 R 001159

S

01 S 001641	02 S 001805
04 S 000280	10 S 000037

03 S 000664

T

05 T 001446	04 T 001727
09 T 000659	07 T 000823
01 T 001281	11 T 000219

U

10 U 001278	11 U 001903
12 U 001109	03 U 001636
04 U 000471	01 U 000444
05 U 000055	12 U 00193

04 U 000184

V

06 V 000779	04 V 001467
06 V 001336	03 V 001770
04 V 000249	06 V 000965
09 V 001886	12 V 000768

W

04 W 000849	06 W 001060
02 W 000653	07 W 000023
03 W 000494	09 W 001601

10 W 000248

X

08 X 000071	03 X 000762
06 X 001340	06 X 000010
06 X 001379	08 X 000257
02 X 000662	11 X 000760

02 X 000735

Y

01 Y 000124	03 Y 001978
07 Y 001512	03 Y 001302
11 Y 000040	08 Y 001885
12 Y 000186	08 Y 001929
06 Y 000641	03 Y 001358

Z

05 Z 000674	05 Z 001323
03 Z 001477	08 Z 001385
02 Z 001918	06 Z 001616
05 Z 001123	07 Z 000681

கூட்டுத்தாபனங்களில் விரைவில் மாற்றங்கள்

இவ்வாரத்தில் புதிய அமைச்சர்கள் பதவி ஏற்றதும் பல அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைமைப் பதவிகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படும்.

ஏற்கனவே, பல கூட்டுத்தாபனத் தலைவர்கள் தமது ராஜினாமா கடிதங்களைச் சமர்ப்பிக்க முடிவு செய்திருப்பதாக அறியப்படுகின்றது.

கைத் தொழில், மீன்பிடி அமைச்சின் கீழுள்ள இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபை, ஏயர் சிலோன், இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம், லங்கா சலுசல ஆகியவற்றில் உடனடியாக மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்க கூட்டுத்தாபனங்களை பூரணமாகத் திருத்தி அமைப்பது என கூட்டு முன்னணியினர் உடன்பட்டுள்ளனர். (ர)

பேதமைகளை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"எங்களுக்குக் கிடைத்த வெற்றியை மக்களின் வெற்றியாகவே கருதுகிறேன். இந்த வெற்றியை அடைய உதவியவர்களுக்கு எனது இதய பூர்வமான நன்றி உரித்தாகுக.

"இந்த வெற்றி ஒரு விதவையின் கண்ணீரால் உருவான வெற்றி அல்ல. உண்ண உணவும், உடுக்க உடையும், படுக்கப் பாயும் இல்லாது அன்றாடம் கதறி அழும் ஏழைகளின் கண்ணீருக்குக் கிடைத்த வெற்றி இது.

சாதாரண மக்களும் தலை நிமிர்ந்து வாழ எனது அரசாங்கம் உதவி செய்யும். எங்களுக்கு இன்று பல பிரச்சினைகள் உள்ளன. 1956ல் எனது கணவர் பதவிக்கு வந்த போது உருவாக்கிய பல திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அவை எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும்.

"மக்களின் முன்னேற்றத்திற்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன. தனியார் சக்திகளின் ஏகபோகத்திற்கு அணைபோடப்படும். இவற்றில் நாம் வெற்றிபெற மும்மணிகளின் அருள் உங்களுக்குக் கிடைக்கட்டும்" — இவ்வாறு பிரதமர் ஸ்ரீமா தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ம)

படைத் தலைவர்களுடன் பிரதமர் ஸ்ரீமாவோ பேச்சு

பொலீஸ், இராணுவ, விமான கடற்படைகளின் தலைவர்கள் பிரதமர் மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை நேற்று சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட தேவையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி இவர்கள் பிரதம மந்திரியுடன் உரையாடினர்.

இதற்கிடையில் பொது மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து வாக்களிப்பு தினத்தில் நடந்து கொண்டதாக பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் 90 சதவீதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களித்திருப்பதாக மதிப்பிடப்படுகின்றது.

இலங்கையின் சரித்திரத்தில் இது ஒரு சாதனை எனக் கூறப்படுகின்றது.

போதிய ஆசனம் இல்லையாம்!

கொழும்பு, மே 30

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கூட்டு முன்னணி வேட்பாளர்கள் 115 பேருக்கும் அரசாங்க வரிசையில் அமருவதற்கு போதிய ஆசனம் இல்லையாம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org